மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண். 79/2019</u>

2025ம் ஆண்டு ஜனவரி மாதம் 03ம் நாள் வெள்ளிக்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முருகேசன் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலுாக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>03.01.2025 பி.வா.சா.2 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு</u>

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. தாவா சொத்தை நாச்சியண்ணபண்டாரம் என்பவர் கிரயம் பெற்றது எனக்கு நேரில் தெரியாது என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் கிழமேலில் என்ன அளவு தென்வடலில் என்ன அளவு சொல்லப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல தெரியும் கிழமேலில் 34 முழம் தென்வடலில் 46 முழம் என சொல்லப்பட்டுள்ளது. அந்த அளவுகளை நான் பத்திரத்தை பார்த்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. சொன்னதன் அடிப்படையில் அளவீடு செய்தோம் ஒரு முழம் என்றால் 1 ½ அடி நீளம் என்றால் 1 1/2 அடி நீளமும் சொல்வார்கள் 2 அடி நீளமும் சொல்வார்கள். கிழமேலில் எத்தனை அடி நீளம் தென்வடலில் எத்தனை அடி நீளம் என்றால் அது எனக்கு தெரியாது. கிரைய ஆவணத்தில் குறிப்பாக 8 சென்ட் என அளவு கண்டு கிரையம்

பெறப்படவில்லை என்றால் அது எனக்கு தெரியாது. கிரைய ஆவணத்தில் குறிப்பாக 8 சென்ட் என கண்டு கிரயம் பெறப்படவில்லை என்பது பிரதிவாதி சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

2. சுப்பண்ணபண்டாரம் என்பவர் எப்போது இறந்தார் என்றால் தேதி மாதம் எனக்கு தெரியாது அவர் இறந்து சுமார் 15 ஆண்டுகள் இருக்கும். அவரின் வாரிசுகள் சண்முகம் மற்றும் தண்டபாணி ஆகியோர்கள். தண்டபாணி தற்போது உயிரோடு உள்ளாரா என்றால் இல்லை இறந்துவிட்டார். சுப்பண்ணபண்டாரம் என்பவரின் மகன் தான் 1ம் பிரதிவாதி என்றால் சரிதான். சுப்பண்ணபண்டாரத்தின் மகன் தண்டபாணியின் வாரிசுகள் தான் வாதிகள் என்றால் சரிதான். தண்டபாணிக்கு பெண் வாரிசுகள் யாராவது உள்ளார்களா என்றால் ஒரு பெண் வாரிசு உள்ளார். அவர் தற்போது உயிரோடு உள்ளாரா என்றால் இல்லை இறந்துவிட்டார். 2 மற்றும் 3 பிரதிவாதிகள் தான் இறந்து போன தண்டபாணியின் பெண் வாரிசின் வாரிசுகள் என்றால் சரிதான். சுப்பன்னபண்டாரம் என்பவர் இறந்து 30 நாட்கள் கழித்து ஊர் பெரியோர்கள் முன்னிலையில் வாய்மொழியாக பாகப்பிரிவினை எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல வாய்மொழியாக நாங்கள் தான் பாகம் பிரித்துக் கொடுத்தோம். மேற்படியார்களுக்குள் குடும்ப ஏற்பாடு எதுவும் அவர்களுக்குள் நடக்கவில்லை அவர்களுக்குள் வாய்மொழி பாகக்காரர் எதுவும் நடக்கவில்லை என்றும் நாங்கள் தான் பங்கி கொடுத்தோம் என்றும் சொல்கிறேன் என்றால் சரிதான். சுப்பண்ணபண்டாரம் என்பவரின் வாரிசுகளுக்குள் வாய்மொழி பாகக்காரர் எதுவும் நடக்கவில்லை என்றும் குடும்ப ஏற்பாடு எதுவும் நடக்கவில்லை

என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணை நிரூபன வாக்குமூலத்தில் 8 சென்ட் விஸ்தீரணம் உள்ள நிலத்தை கிரையம் வாங்கவில்லை என்றும் சண்முகத்திற்கு 4 சென்ட் நிலமும் தண்டபாணிக்கு 4 சென்ட் நிலமும் வாய்மொழியாக பாகம் பிரித்து கொடுத்ததாகவும் முன்னுக்குப் பின் முரணாக நான் சொல்லி உள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. யாரை வைத்து நிலத்தை அளந்தோம் என்றால் எங்கள் ஊர் காரர்களை வைத்து அளந்தோம். எந்த அளவீடுகளை வைத்து அளவீடு செய்தோம் என்றால் கயிற்றைக் கொண்டு அளவீடு செய்தோம். பிரதிவாதிக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கயிற்றைக்கொண்டு அளந்தது சம்பந்தமாக வரைபடம் ஏதேனும் தயார் செய்தோமா என்றால் இல்லை.

3. அளவீடு செய்த போது அளவுகள் குறித்து குறிப்புகள் ஏதேனும் தயார் செய்தோமா என்றால் இல்லை. குடியிருக்கும் வீட்டிற்கு கிஸ்து வசூல் செய்ய மாட்டார்கள் என்றால் சரிதான் வீட்டு வரி வசூல் செய்கிறார்கள். வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்பு தான் சண்முகம் தாவா சொத்தில் வீடு கட்டினார் என்றால் இல்லை வழக்கு போடுவதற்கு முன்பே கட்டி முடித்து விட்டார். முன்பு அதில் ஓட்டு வீடு இருந்தது அதை இடித்துவிட்டு சண்முகம் வீடு கட்டி முடித்து விட்டார் என்ற விபரத்தை நான் எனது முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு சண்முகம் மற்றும் தண்டபாணி என்பவரின் வாரிசுகள் ஆகியோர்களுக்கு இடையே நான் பைசல் ஏதேனும் பேசினேனா என்றால் ஊர்காரர்களும் நானும் சேர்ந்து பேசினோம். அந்த

பைசலில் நான் சண்முகத்திற்கு ஆதரவாக பேசியதால்தான் வாதிகள் பைசலுக்கு ஒத்துவரவில்லை என்றால் சரியல்ல. நானும் சண்முகம் என்பவரும் ஆளுங்கட்சியை சேர்ந்தவர்கள் என்றால் அதற்கும் இது வழக்கிற்கும் சம்பந்தமில்லை. நானும் சண்முகம் என்பவரும் ஒரே கட்சியை சார்ந்தவர்கள் என்பதால் நான் சண்முகத்திற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2025.01.03 18:57:31 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்